**ஜனவரி – 03**

# TNPSC துளிகள்

- 2017 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்தியப் பளு தூக்கும் வீரரான சீமா என்பவருக்கு தேசிய ஊக்க மருந்து எதிர்ப்பு ஆணையத்தினால் அடுத்த 4 ஆண்டுகளுக்குப் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப் பட்டுள்ளது.
- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவரான வெங்கையா நாயுடு "மறுமலர்ச்சி மனிதன் - அருண் ஜெட்லியின் பல்வேறு முகங்கள்" என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
    - அருண் ஜெட்லியைப் பற்றி விவரிக்கும் இந்த புத்தகமானது தீபா வெங்கட் மற்றும் முப்பவரபு ஹர்ஷவர்தன் ஆகியோரால் தொகுக்கப் பட்டுள்ளது.
- தனியார் மயமாக்கப்பட்ட இந்தியக் கப்பல் கழகத்தின் (Shipping Corporation of India - SCI) முழுநேரத் தலைவராகவும் அதன் நிர்வாக இயக்குநராகவும் (Chairperson and Managing Director - CMD) ஹர்ஜீத் கவுர் ஜோஷி நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்த நியமனத்தின் மூலம் 13வது CMDயாகவும் SCIயின் முதலாவது பெண் CMDயாகவும் இவர் உருவெடுத்துள்ளார்.
- ஆப்கானிஸ்தான் சுழற்பந்து வீச்சாளரான முஜீப் உர் ரஹ்மான் என்பவர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய இளைய பந்து வீச்சாளர் என்ற ரஷீத் கானின் சாதனையை முறியடித்துள்ளார்.
- மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகமானது மடகாஸ்கர் மற்றும் கொமொரோஸ் ஆகிய நாடுகளை இந்தியப் பெருங்கடல் பிராந்திய (Indian Ocean Region - IOR) பிரிவில் சேர்த்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## E - BCAS திட்டப் பயிற்சித் தொகுதி

- விமானப் பயணப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி உயிர்த் தரவினால் செயல்படுத்தப்படும் ஒரு மையப்படுத்தப்பட்ட அணுகல் கட்டுப்பாட்டு அமைப்பு (Centralised Access Control System - CACS) மற்றும் 'E - BCAS திட்டப் பயிற்சித் தொகுதி' ஆகியவற்றை புது தில்லியில் தொடங்கினார்.
- இந்த 2 திட்டங்கள் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காகவும் விமான நிலையங்களில் தொழில் தொடங்குவதை எளிதாக்குவதற்காகவும் தொடங்கப் பட்டுள்ளன.
- CACS திட்டமானது விமான நிலையங்களில் பணியாளர்கள் மாற்ற செயல்முறையை டிஜிட்டல் மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- E - BCAS தொகுதி மூலம், 1.5 லட்சத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் நேரடிச் சேவையிலிருந்து டிஜிட்டல் தளத்திற்கு மாற்றப்பட இருக்கின்றனர்.
- இது இந்திய அரசாங்கத்தின் மின் ஆளுகை முயற்சியின் கீழ் "காகிதமற்ற அலுவலை" அடைவதற்குத் திட்டமிட்டுள்ளது.

## இந்திய வரலாறு மாநாட்டின் 80வது அமர்வு


- இந்திய வரலாற்று மாநாட்டின் (Indian History Congress - IHC) 80வது அமர்வானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை வரை கேரளாவில் உள்ள

கண்ணூரில் நடத்தப்பட்டது.

- IHC ஆனது 1935 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது தெற்காசியாவில் வாழும் தொழில்முறை வரலாற்றாசிரியர்களின் மிகப்பெரிய ஒரு சங்கமாகும்.
- IHCயின் முதலாவது அமர்வானது 1935 ஆம் ஆண்டு பூனாவில் உள்ள பாரத் இதிஹாஸ் சன்ஷோதக் மண்டலில் நடைபெற்றது.
- IHCயின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:
    - இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வரலாற்றுப் படைப்புகளின் தரத்தை ஒழுங்குபடுத்துதல்,
    - நடுநிலையான மற்றும் ஆதாரப்பூர்வமான வரலாற்றை ஊக்குவித்தல் மற்றும்
    - சார்பு மற்றும் அரசியல் இல்லாத ஒரு நியாயமான மற்றும் விஞ்ஞானப் பூர்வமான வரலாற்றில் ஈடுபடுவது.
- பாரத இதிஹாச சன்ஷோதக் மண்டல் ஆனது 1910 ஆம் ஆண்டில் புனேவில் கே சி மெஹெண்டேலின் ஆதரவுடன் விஸ்வநாத் காஷிநாத் ராஜ்வாடேவால் நிறுவப்பட்டது.

## தேசிய உள்கட்டமைப்புத் தொடர்

- 2019 - 2025 வரையிலான காலகட்டதிற்காக தேசிய உள்கட்டமைப்புத் தொடர் (National Infrastructure Pipeline - NIP) குறித்த பணிக் குழுவின் ஒரு அறிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- 102 லட்சம் கோடி மதிப்பிலான தேசிய உள்கட்டமைப்புத் தொடர் என்ற ஒரு திட்டத்தை மத்திய நிதியமைச்சரான நிர்மலா சீதாராமன் வெளியிட்டுள்ளார்.




- 2019 - 20 முதல் 2024 - 25 வரையிலான இந்த திட்டத்திற்கான செயல்முறையைத் தயாரிப்பதற்கு பொருளாதார விவகாரங்கள் துறை செயலாளர் தலைமையில் பணிக் குழு ஒன்றை நிதி அமைச்சகம் அமைத்திருந்தது.
- 2020 முதல் 2025 வரையிலான நிதியாண்டுகளில், இந்தியாவில் உள்கட்டமைப்பில் எதிர்பார்க்கப்படும் மொத்த மூலதனச் செலவினங்களில் எரிசக்தி (24%), சாலைகள் (19%), நகர்ப்புறம் (16%), மற்றும் ரயில்வே (13%) போன்ற துறைகளில் 70% மூலதனச் செலவினம் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

- மூலதனச் செலவினங்கள் 39:39:22 என்ற வரையறையின் படி, மத்திய, மாநிலங்கள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றினால் பகிர்ந்து கொள்ளப்பட இருக்கின்றது. இது 102 லட்சம் கோடிக்கு மேல் முதலீடு செய்வதற்கான திட்டங்களை கோடிட்டுக் காட்டியுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## ஜனவரி மாதம் முதல் – வணிகக் கழிவு விகிதம்

- ஜனவரி மாதம் முதல், ரூ. 50 கோடி அல்லது அதற்கு மேல் வருவாய் ஈட்டும் அனைத்து நிறுவனங்களும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு ரூபே கடன் அட்டை மற்றும் யுபிஐ கியூஆர் குறியீடு மூலம் பணம் செலுத்துவதற்கான வசதியை வழங்க வேண்டும்.
- இந்தப் புதிய அறிவிப்பின் அடிப்படையில், வணிகக் கழிவு விகித (Merchant Discount Rate - MDR) கட்டணமானது வாடிக்கையாளர்களிடமிருந்தும் வணிகர்களிடமிருந்தும் வசூலிக்கப்பட மாட்டாது.
- MDR என்பது தங்களது நிறுவனங்களில் வாடிக்கையாளர்களிடமிருந்து கடன் மற்றும் பற்று அட்டைகள் மூலம் பணம் வசூலித்ததற்காக வங்கியினால் வணிகர்களுக்கு விதிக்கப்படும் ஒரு கட்டணமாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ரோகிணி 200 வளிமண்டல ஆய்வு விண்கலன்

- விக்ரம் சாரபாய் விண்வெளி மையமானது (Vikram Sarabhai Space Centre - VSSC) கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள தும்பாவிலிருந்து ரோகிணி 200 என்ற ஒரு வளிமண்டல ஆய்வு விண்கலனை வெற்றிகரமாக விண்ணிற்கு ஏவியுள்ளது.
- இதன் நோக்கம் கிரகணத்தின் போது பூமியில் உள்ள வளிமண்டலத்தின் மேல்பகுதியில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்வதாகும்.
- VSSC ஆனது 2வது ஆர்எச் 200 என்ற விண்கலனையும் அடுத்த நாளிலேயே விண்ணுக்கு செலுத்தியது.

### *வளிமண்டல ஆய்வு விண்கலன்*

- இது ஒரு ஆய்வு விண்கலன் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இது கருவிகளைச் சுமந்து செல்லும் ஒரு விண்கலன் ஆகும். இது அதன் துணை சுற்றுப்பாதையில் சுழலும் போது அளவீடுகளை எடுத்து அறிவியல் பரிசோதனைகளை செய்யும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்த விண்கலன்கள் 1960களில் இருந்து தும்பாவிலிருந்து ஏவப்பட்டு வருகின்றன.

# மாநிலச் செய்திகள்

## “ePAUTI” செயலி

- ஒடிசா மாநில அரசு ஒரு மின்னணு முறையிலான சான்றிதழ் தளம் மற்றும் ePAUTI என்ற ஒரு செயலி ஆகியவற்றை அறிமுகப் படுத்தியுள்ளது.
- மின்னணுச் சான்றிதழ் திட்டமானது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் 5 டி மாதிரி நிர்வாகத்தின் ஒரு பகுதியாகும்.

- இந்தச் செயலியைப் பயன்படுத்தி, மக்கள் தங்கள் திறன்பேசிகளின் உதவியுடன் அரசு அலுவலகத்திற்குச் செல்லாமல் ஆன்லைனில் நில வருவாயைச் செலுத்தலாம்.
- முதல்வரின் கூற்றுப் படி, இந்தச் சான்றிதழ்களுக்கு கட்டணம் ஏதும் வசூலிக்கப்பட மாட்டாது. ஏனெனில் இந்த சேவைகள் மக்களின் உரிமைகள் என்று அம்மாநில முதல்வர் அவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.




## கேரளா - CAA எதிர்ப்புத் தீர்மானம்

- சர்ச்சைக்குரிய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019 (Citizenship Amendment Act - CAA) என்ற சட்டத்தைத் திரும்பப் பெறக் கோரி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய இந்தியாவின் முதலாவது மாநிலமாக கேரள மாநிலம் உருவெடுத்துள்ளது.
- கேரள அரசாங்கத்தின் கூற்றுப் படி, CAA சட்டமானது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கையான மதச்சார்பின்மைக்கு முரணானதாகும்.
- குடியுரிமை திருத்தச் சட்டம், 2019 ஆனது கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நிறைவேற்றப் பட்டது.
- இந்தச் சட்டம் 1955 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தைத் திருத்தியது.
- இது இந்துக்கள், புத்தர்கள், சீக்கியர்கள், சமணர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பார்சி ஆகிய மதங்களைச் சேர்ந்த சிறுபான்மையினர் இந்தியக் குடியுரிமையைப் பெற அனுமதிக்கின்றது.
- இந்தச் சட்டம் குறித்த பிரச்சினை என்னவென்றால், இச்சட்டத்தில் முஸ்லிம்கள் இடம் பெறவில்லை என்பதாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தனு ஜாத்ரா திருவிழா

- 11 நாட்கள் நடைபெறும் ஒரு புகழ்பெற்ற திறந்தவெளி நாடக விழாவான தனு ஜாத்ரா விழாவானது மேற்கு ஒடிசாவின் பார்கார்ஹில் தொடங்குகின்றது.
- ஜாத்ராவின் நாடகமானது கிருஷ்ணர் மற்றும் அவரது மாமா கம்சனின் கதையை

அடிப்படையாகக் கொண்டது.

- இது கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் பெயரிடப்பட்ட உலகின் மிக நீண்ட திறந்தவெளி நாடகமாகும்.
- இந்தியாவின் சுதந்திரத்தைக் கொண்டாடுவதற்காகவும் தீமைக்கு எதிரான சிறந்த வெற்றியைக் குறிப்பதற்காகவும் இந்தத் திருவிழாவானது 1947-1948 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது.
- இந்திய அரசானது தனு ஜாத்ராவுக்கு தேசிய விழா என்ற ஒரு அங்கீகாரத்தை 2014 ஆம் ஆண்டு நவம்பரில் வழங்கியது.

# முக்கிய தினங்கள்

## உலகளாவிய குடும்ப தினம் - ஜனவரி 01

- உலகளாவிய குடும்ப தினமானது அமைதி மற்றும் பகிர்வு ஆகியவற்றின் ஒரு தினம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இந்த விடுமுறை தினக் கொண்டாட்டமானது அமெரிக்கக் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஆதரவுடன் அமெரிக்க உலக குடும்ப அமைப்பின் முயற்சியின் மூலம் 2007 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- இறுதியில் மனித இனத்தை உருவாக்குகின்ற “நாம் உலகளாவிய குடும்பத்தின் ஒரு அங்கம்” என்ற எண்ணத்தை குடும்ப தினமானது அங்கீகரிக்கின்றது.




## குரு கோபிந் சிங் ஜெயந்தி - ஜனவரி 02


- குரு கோபிந்த் சிங்கின் பிறந்த தினத்தை இந்தியா கொண்டாடியது.
- இவர் சீக்கியர்களின் 10வது குருவாகக் கருதப்படுகின்றார்.
- இவர் 1666 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் தேதியன்று பிறந்தார்.
- குரு கோபிந்த் சிங் 1699 ஆம் ஆண்டில் கால்சா என்ற சீக்கிய படைவீரர் சமூகத்தை நிறுவினார்.
- இவர் சீக்கிய மதத்தில் ஐந்து “கே”களை அறிமுகப்படுத்தினார்.
- இது "பஞ்ச் காக்கர்" என்று அழைக்கப்படுகின்றது. அவை வெட்டப்படாத முடி (கேஷ்), இரும்பு வளையல் (காரா), ஒரு மர சீப்பு (கன்கா), 100% பருத்தி உள்ளாடை (கச்சேரா) மற்றும் இரும்புக் குத்துவாள் (கிர்பன்) ஆகியனவாகும்.
- சீக்கிய மதத்தின் புனித உரையான தாசம் கிரந்த் ஆனது குரு கோபிந்த் சிங்கிற்கு அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.




# இதரச் செய்திகள்

## 11வது CEBRன் அறிக்கை

- இங்கிலாந்தைத் தளமாகக் கொண்ட பொருளாதாரம் மற்றும் வணிக ஆராய்ச்சி மையமானது (Centre for Economics and Business Research - CEBR) தனது 11வது வருடாந்திர அறிக்கையை ‘உலகப் பொருளாதாரக் குழு அட்டவணை 2020’ (WELT 2020 - World Economic League Table) என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, 2026 ஆம் ஆண்டிற்குள் ஜெர்மனியைப் பின்னுக்குத் தள்ளி உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- 2034 ஆம் ஆண்டில் ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளி உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுக்கும் என்றும் மதிப்பிடப் பட்டுள்ளது.
- அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் 3வது இடத்திற்கு போட்டியிடும் என்று இந்த அறிக்கை மதிப்பிட்டுள்ளது.
- அமெரிக்கா 2020களில் உலகின் மிகப்பெரியப் பொருளாதாரமாக இருக்கும். மேலும் 2033 ஆம் ஆண்டில் சீனாவால் அமெரிக்கா பின்னுக்குத் தள்ளப்படலாம் என்றும் இந்த அறிக்கை கூறுகின்றது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★